
கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 56 இதழ் : 09 டிசம்பர் 2021 விலை ரூ.25/-



## வாழும் காலத்தையும் வாழ வைக்கிறார்! - ம.ரா.

# உள்ளடக்கம்


கட்டுரை

மு. இராமசுவாமி 06

எச்.முஜீப் ரஹ்மான் 27

எஸ். சண்முகம் 49

ப.சகதேவன் 62

சிறுகதை

லட்சுமிஹர் 18

சத்ய ஜித்ரே

தமிழில் : எஸ். அற்புதராஜ் 40

பலராம் செந்தில்நாதன் 56

வாசுதேவன் அருணாசலம் 65

கவிதை

வலங்கைமான் நூர்தீன் 17

எஃபே பால் அஸினோ

தமிழில்: வ. ஜெயதேவன் 26

தங்கேஸ் 39

நட்சத்திரா 48

இனியவன் காளிதாஸ் 48

தசாமி 61

கனகா பாலன் 68

கடைசிப் பக்கம்

இந்திரா பார்த்தசாரதி 69


**வணக்கம்**

கணையாழி தற்போது மின்னிதழாக மட்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து **www.kanaiyazhi.com** அல்லது **magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி அனுப்பலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.



சிறுகதை
வாசுதேவன் அருணாசலம்

# மனுசன மாத்தும்டா! மனுசனா மாத்தும்டா!

**பூவிருந்தவல்லி ஹை ரோடு, மதுரவாயில், சென்னை – T 4 காவல் நிலையம் – 03.07.2021 – சனிக்கிழமை – காலை 10:33:21 மணி:**

*அலைபேசியில் "ரெகிட்ட... ரெகிட்ட... ரெகிட்ட... ஊஊஊ... ரெகிட்ட... ரெகிட்ட... ரெகிட்ட... ஊஊஊ ...ஏ... என்னவேனா நடக்கட்டும் நா சந்தோசமா இருப்பேன்... உசிரிருக்கு வேறவென்னவேனும் உல்லாசமா இருப்பேன்.... என்னவேனா நடக்கட்டும் நா சந்தோசமா இருப்பேன்... உசிரிருக்கு வேறவென்னவேனும் உல்லாசமா இருப்பேன்.... ஏதோ பஞ்சா போட்டுவிடு மாப்பிள..."*

*"அண்ணே உங்க போன்தான் அடிக்குது எடுங்க.... ரிங்டோன மாத்துணே!" என்றான் பிரகாஷ் இருபத்தி எட்டு வயதில் காவல் துறையில் கீழ்நிலை காவலராகப் பணியில் சேர்ந்தவன்.*

*அலமாரியில் எதையோ தேடிக்கொண்டிருந்த நாற்பத்து எட்டு வயது தலைமைக் காவலர் ராமையா அலைபேசியில் அடித்த ரிங்டோன் தன்னுடையதுதான் என்பதை உணர்ந்து, பதறிப்போய் ஓடிவந்து தன்னுடைய மேஜையின்மேல் இருந்து செல்போனை எடுத்து அழைத்தது யார் என்று பார்த்தார். புன்னகைக்கும் மனைவியின் புகைப்படம். புகைப்படம் எடுக்கப்பட்ட தருணம் மனதில் மின்னிமறைய, இடதுகையில் அலைபேசியைப் பிடித்துக் கொண்டு வலதுகை ஆள்காட்டி விரலால் கீழிருந்து மேலே தேய்த்து, பேசுவதற்கு காதருகில் வைக்கிறார். அவரது பெரிய மகன் வைத்துக் கொடுத்திருந்த அலைபேசியின் ரிங் டோன் தந்த சங்கடத்தோடு என்னமா... (மெல்லிய குரலில்)... சொல்லு!*

*"ஏங்க தங்கமணி நாவல நீங்கதான் எடுத்துட்டுப் போயிட்டீங்களா? இங்க நா வீடுபூராம் தேடிட்டேன். காணோம்!" சற்றே அதட்டும் தொனியில் கேட்டாள் ராமையாவின் மனைவி, இனிய மகிழந்தி!*

*"பெரியவன்ட்ட கேட்டேன். நீ படிச்சுட்டேன்னு சொன்னானே!"*

ராமையாவின் தனிந்த குரல் மாறவில்லை!

“எங்க படிக்கவிட்றீங்க! காலேல எந்திரிச்சா ராத்திரிவரைக்கும் வேல... வேல... வேல... கொஞ்சம் நமக்கு பிடிச்சத வாசிக்கலாம்னு... அதை செஞ்சுகொடு... இதை செஞ்சுகொடுனு சின்னது உசிரவாங்குது. கிச்சன்லேயே வாழ்க்க முடிஞ்சிரும் போலிருக்கு!

“சரிமா! நான் வரும்போது கொண்டுவரேன்.” தெரிந்சிருந்தா எடுத்துட்டு வந்திருக்க மாட்டேன்மா.” என்று கெஞ்சினார் ராமையா.

“மறந்து வச்சிட்டு வந்துட்டேன்னு மட்டும் சொல்லிராதிங்க எனக்கு கெட்ட கோவம் வரும். பாத்துக்குங்க!” குரல் சற்று உயர்ந்தேயிருந்தது.

“சரிமா” மனைவியின் கைதியாய் பதிலளித்தார் தலைமைக் காவலர், ராமையா. “ஏங்க....” இனிய மகிழந்தி தொடர்ந்தாள்.

“சொல்லுமா” ராமையா.

“இன்னைக்கு கவிதை நல்லா இருந்திச்சுங்க” இனிய மகிழந்தியின் குரலில் அன்புரசம் திடீரென்று வழியத் தொடங்கியது!

“படிச்சிட்டியா? ஏதோ தெரியல... அதுவாட்டுக்கு வந்திருச்சு. எனக்கும் அப்படித்தான் தோனுச்சு. நல்லா வந்திருக்கேனு” என்று ராமையாவின் புன்முறுவலுக்கிடையே வார்த்தைகள் வெளியேறின.

கவிதையின் வரிகள் அனைத்தும் ராமையாவின் நினைவில் ஒருசேர, சட்டென்று தோன்றி மறைந்தது!

“மணந்ததே

இல்லையடி

இந்த மல்லிகை

உன்னை

மணக்கும்வரை.”

“வரும்போது என்னமும் வாங்கிட்டு வரனும்னா, போன் பண்ணுமா” என்றார் ராமையா. “இல்ல.... அந்த...” என்று இனியமகிழந்தி ஆரம்பிக்கும் முன் குறுக்கிட்டார் ராமையா.

“எஸ்செ வந்துட்டார். அப்புறம் கூப்பிட்றேன்” என்று அவசர அவசரமாக அலைபேசியில் பொத்தானை அழுத்தி மேஜையில் வைத்துவிட்டு வணக்கம் சொன்னார்.

உள்ளே நுழைந்த உதவி காவல் ஆய்வாளர் செழியன் நின்று ம்..ம்... என்ற சைகையில் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, இடதுபக்கத்தில் எழுந்து நின்ற பிரகாஷிடம் “ஸ்ட்ரெந்த்த வண்டில ஏத்து” என்றார்.

“எத்தன பேருங்க சார். பத்து போதுங்கலா, சார். இல்ல கூட எது வேணுங்கலா?” என்றான் பிரகாஷ்

“எஸ்பி ஆபிஸிலிருந்து இன்பர்மேசன்யா. நடேசன் நகரில் மர்டராம்.” பத்து போதும். கிளம்புங்க... என்று சொல்லிவிட்டு அவருடைய அறைக்கு செல்ல முற்பட்டார். அப்போது பிரகாஷ், “ராமையா அண்ணே வேணுங்கலாயா? என்றான். செழியன் சற்று யோசித்துவிட்டு “உங்க அண்ணே இருக்கட்டும்.” வேணும்னா... கூப்பிட்டுக்குவோம்.” என்று அங்கிருந்து நகர்ந்தார்.

“ஏன்டா, பிரகாசு. என்ன ஏன்டா கோர்த்துவிர்ற...” என்று முணுமுணுத்தார் ராமையா. ராமையாவின் உணர்விற்கும் மனத்தின் தன்மைக்கும் ஏற்ற உத்தியோகம் அதுவில்லை என்பது அவருக்கும் தெரியுமோ இல்லையோ அவரைச் சுற்றியிருக்கும் அனைவருக்கும் தெரியும். பிரகாஷ், ராமையாவின் சொந்த ஊர் என்பதால் அங்கு உரிமைகள் செல்லமாக உரசிக்கொள்ளும் உராய்வுகளின்றி. “ஏண்ணே... இங்க ஒட்காந்து சும்மா கத படிக்கலாம்னு பிளான் பண்றியா? எப்பப்பாரு எதையாவது வச்சிக்கிட்டு

படிச்சிகிட்டு. இது என்ன ஸ்டேசன்னு நினச்சிங்களா.. இல்லை.. லைப்ரேரினு நினைச்சிங்களா...என்று உரிமைகலந்த நய்யாண்டியோடு கிண்டலடித்தான் பிரகாஷ்.

"நல்ல நாவல்ரா... அருமையா இருக்குடா... எஸ்.கே.தங்கமணி எழுதியது. படிக்க... படிக்க... மனசு இளகும்டா... எங்கிருந்துதான் இந்த வார்த்தைகள பிடிக்கறானோ... இந்த மனுசன்... இனிக்கும்டா.... படிக்க படிக்க... மனசு பறக்கும்டா... நல்ல மனுசனா இருக்கனும்னா, இந்தாளோடெ நாவல்ல நால படிச்சா போதும்டா. இலக்கியம் மனுசன மாத்தும்டா. மனுசனா மாத்தும்டா" என்று ராமையா தன்னை மறந்த நிலையில் வார்த்தைகளைக் கொட்டினார்... "இப்பென்னா மனுசனா இல்லாமா மாடாவ இருக்கோம்? பேரப்பாரு தங்கமணி, தகரமணியினுக்கிட்டு. ஏண்ணே... ஆம்பிளயா பொம்பளையா...? பிரகாஷின் கேள்வி எரிச்சலூட்டினாலும் ராமையா இன்னும் தாழ்ந்த குரலில் "ஆம்பளடா" அவரோட பொண்டாட்டி பேருல எழுதுறாருனு நினைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே வீட்டிலிருந்து கொண்டுவந்திருந்த பையிலிருந்து அந்த நாவலை எடுத்து, பின்அட்டையில் அச்சிடப்பட்டிந்த எழுத்தாளரின் படம் தென்பட மேஜையின் மீது வைத்தார்.

"பிரகாசு, வாழ்க்கையில எவ்வளவோ கஷ்ட்டத்த அனுபவிச்சாச்சுடா... தூக்கு போட்டு தொங்கிடலாம்னு கூட தோனியிருக்குதுடா. அப்பெல்லாம் இந்த ஆளோட எழுத்துதான்டா காப்பாத்துச்சு. எதையும் சந்திப்போம்னு ஒரு உத்வேகம் தரும்டா இந்த ஆளோட எழுத்து. வாழ்க்கைனா என்னானு உணரவச்சவன்டா இந்த எஸ்.கே.தங்கமணி. நானும் மகிழந்தியும் எத்துனதடவ இந்த ஆளோட நாவல சேந்து வாசிச்சிருக்கோம் தெரியுமா! மகிழ்ந்தி அப்பா ஒரு தமிழ் வாத்தியார்டா... மகிழ்ந்தி நல்ல கவிதை எழுதுவாடா... இந்த ஆளோட எழுத்து அவளுக்கு ரொம்ப பிடிக்கும்டா... எங்கம்மா இறந்தப்ப நானும் போய்ச் சேந்திரலாமுனு நினைச்சேன்டா... மகிழந்திதான் இந்த ஆளோட நாவல கொடுத்து படிக்கச் சொன்னாடா.. மன அழுத்தத்தை குறைக்கும்னா... உண்மையச் சொல்லப்போன இன்னைக்கு நான் உசிரோட இருக்கிறதுக்கு ஒரே காரணம் இந்த ஆளோடு எழுத்துதான்டா... அது ஒரு மருந்துடா... உங்களுக்கெல்லாம் எங்கடா இதெல்லாம் புரியப்போகுது?" என்று பிரகாஷிடம் சொல்லிக்கொண்டே ராமையா தன்னுடைய நாற்காலியில் அமர்ந்தார். ஒட்டுமொத்த இளைய சமுதாயம் வாசிப்பைப் புறக்கணிக்கிறது என்ற தன் ஆதங்கத்தை வெளிக்காட்டக் கிடைக்கும் வாய்ப்பை ராமையா என்றுமே தவறவிட்டதில்லை. "ஸ்ட்ரெந்த்த ஏத்திட்டியா" என்று உதவி காவல் ஆய்வாளர் செழியன் இவர்களின் பேச்சைப் பொறுக்காமல், பொருட்படுத்தாமல் அவரது அறையிலிருந்து உரத்த குரலில் அதட்டினார். "இந்தா ஏத்திரேன், சார்." என்று சைகையில் ராமையாவை கடிந்தவாறே வெளியில் சென்றான் பிரகாஷ்.

**அதே காவல் நிலையம் – 03.07.2021 – சனிக்கிழமை – பிற்பகல் 03:12:24 மணி:**

"உள்ள ...செல்லுல உட்காரவையி... இரண்டுபேர அங்க இருக்கச் சொல்லு. ஜிகச்சுக்கு போன் பண்ணி டாக்டர் இருக்காரானு செக்பண்ணு, இருந்தா ரிமாண்ட் பண்ணுறதுக்கு மெடிக்கல் சர்டிஃப்க்கிட் வாங்கி, எல்லா பார்மால்டிஸையும் சீக்கிரம் முடி. எஸ்பி பெர்மிசன் வாங்கிட்டாராம்.

மேஜிஸ்திரேட் வீட்டுக்கே போயி ரிமாண்ட் ஆர்டர் வாங்கிடலாம். என்ன

புரியுதா" என்று தன்னைப் பின்தொடர்ந்த பிரகாஷிடம் பேசிக்கொண்டே, தன் அறைக்குள் சென்றார்.

"சரிங்க சார்" என்றான் பிரகாஷ்.

"ராமையாவ கூப்பிட்டு... படிச்சது போதும்னு சொல்லி.. போயி அக்யூஸ்ட்ட டீடைல்ஸ் கலெக்ட் பண்ணச் சொல்லு. எப்.ஐ.ஆர் போடணும்." என்றார் செழியன்.

"சரிங்க சார்" என்று கூறிவிட்டு பிரகாஷ் அறையைவிட்டு வெளியேறினான். ராமையாவின் மேஜைக்கு சென்று "அண்ணே.. அக்யூஸ்ட்ட டீடைல்ஸ் எடுத்திடுவிங்களாம். சொன்னாரு. நான் ஜிகச்சுக்கு போன்போட்டு டாக்டர் இருக்காரானு செக் பண்ணணும்" என்று அங்கிருந்து நகர்ந்தான்.

ராமையா ஒரு வெள்ளைத்தாளைத் தன்னுடைய நான்கு முனைகளும் மழுங்கிப் போன பற்றுக் கருவி பொருத்திய அட்டையில் மாட்டிக்கொண்டு, கொலைக் குற்றம் சாட்டப்பட்ட நபரை உட்காரவைத்திருக்கும் அறைக்குச் சென்றார். அங்கேயிருந்த இரண்டு காவலர்கள் ராமையாவிற்கு வணக்கமிட்டு சற்று நகர்ந்து வழிவிட்டனர். ஒருவர் அருகிலிருந்த நாற்காலியை குற்றம் சாட்டப்பட்ட நபரின் அருகில் இழுத்துப் போட்டார். ராமையா நாற்காலியில் அமரும்முன் அந்த இரண்டு காவலர்களையும் பார்த்து "கூட இங்கேயே இருங்க. எல்லாம் செக் பண்ணிட்டிங்களா? ஒன்னும் இல்லையே! அன்னாக்கயிற அறுத்திட்டீங்களா? என்றார்.

இருவரில் ஒருவர் பதிலளித்தார்... "எல்லாம் பண்ணியாச்சுங்க." ராமையா கேட்டுக் கொண்டே போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்தார். தலைகுனிந்து உட்கார்ந்திருந்த கொலைக் குற்றம் சாட்டப்பட்ட அந்த நபரை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்து, தான் கொண்டுவந்த வெள்ளைத்தாளில் திறந்த மை பேனாவை மேல் இடது முனையில் வைத்து எழுதுவதற்குத் தயாரானார். "பேர் சொல்லுங்க" என்றார். பதிலில்லை. சற்று உரத்த குரலில் "பேர் சொல்லுங்க" என்றார் மீண்டும். பதிலில்லை. ராமையா தன் தலையை நிமர்த்தி, கொலைக் குற்றம் சாட்டப்பட்ட அந்த நபரைக் கூர்ந்து கவனித்தவாறே, "எங்கேயோ பார்த்ததுபோல் இருக்கிறதே" என்று ராமையா யோசித்து நினைவிற்குக் கொண்டு வருமுன் பதில் வந்தது.

"எஸ்.கே.தங்கமணி."

vasuaruntamil@gmail.com ■